LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 15 Issue : 06 SEPTEMBER 2026 Tamil & English Monthly Price: Rs. 10/-
official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



A new board takes incharge of

2024-2026 SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI **2026-2028**

BOOK POST

To



Fine Printers

Graphic | Print | Packaging



CTP
PREPRESS SOLUTIONS



WEDDING CARDS | BROUCHER | FLYERS | CALANDERS

PACKAGING BOX | LABELS



+91 93441 33320 +91 63834 33909
+91 82489 30871
finekumaran5@gmail.com
137/1 South Marret Street, (Manjanakkara St. Junction), Madurai - 625 001.



JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

Prof. Dr. M.V. SUBBURAMAN

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

Ananda Nilayam

Mayflower

The Banquet Hall A/C

Location - Google Map

Marriage Function | Betrothal | Naming Ceremony
Birthday Party | Puberty | Get-to-gether

Hall available for all type of functions

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

தலைவர் அறிக்கை

அன்புத்தோழமை கொண்ட நெஞ்சங்களுக்கு நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், 2007ல் துவங்கிய பயணம், சீரான முறையில், ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய நிர்வாகப் பொறுப்புகள் மாற்றம் கண்டு, தற்போது 9வது நிர்வாகத்திலிருந்து 10வது நிர்வாகத்திற்குள் செல்ல இருக்கிறது. இடையில், ஓராண்டுகாலம் கொரோனா காரணமாக மட்டுமே அப்போதைய நிர்வாகம் ஓராண்டு நீடித்தது தவிர்க்கமுடியாமல் நீடித்தது.

இந்த இரண்டாண்டுகளில், தலைமைப்பொறுப்பில் கிடைத்த அனுபவம் அளப்பரியது. ஈடு இணையற்றது. அனைத்து நிலைகளிலும் உறுதுணையாக இருந்த முன்னாள் தலைவர்களுக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேம்பர்-ன் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் நிர்வாகிகள் மற்றும் செயற்குழுவினரின் பணிகள் பாராட்டுக்குரியது. முக்கியமாக, இதழ்குழு, நிகழ்ச்சிக்குழு, அரசு தொடர்புக் குழு, வாழ்த்துக்குழு மற்றும் உணவுக்குழுவினர்களின் களப்பணி மெச்சத்தக்கது.

இன்று நம் சமூகத்தில், சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முன்னோடிகளால் பெற்றிருக்கிறது. அந்த நல்ல பெயர் இன்றும் தொடர நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அவர்களுடன் இணைந்த சிறப்பு அழைப்பாளர் ஆகியோரின் சீரிய பங்களிப்பும், ஆர்வமும் தான் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. போஷக அங்கத்தினர்கள் மற்றும் கௌரவ ஆலோசகர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும். ஊர் கூடி தேர் இழுப்பது என்பது போல, தற்போது நமது சேம்பர் நல்ல நிலையை அடைந்திருக்கிறது.

இனி வரும் புதிய நிர்வாகம் மேலும் சிறப்புடன் செயல்பட்டு நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ஐ அடுத்த உயரிய கட்டத்திற்கு கொண்டு செல்வார்கள் என்று நம்புகிறேன்.

நிர்வாக ரீதியாக, என் தலைமைப்பொறுப்பிற்கு உதவியாக இருந்த துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன், உறுதுணையாக செயலாற்றிய பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, அவருடன் இணைந்து பணியாற்றிய திரு. T.N. சூரியபிரகாஷ் மற்றும் திரு. S.G. ஸ்ரீநிவாசன். இடையில் திரு. S.G. ஸ்ரீநிவாசன் அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக விடுப்பிலிருந்ததற்கு மாற்றாக களப்பணியாற்றிய திரு. K.K. தினகரன், சரியான நிதித் திட்டமிடலுடன் செயல்பட்ட திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வரும் 2026-28 புதிய நிர்வாகத்திற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு என் தலைமைப் பொறுப்பிலிருந்து விடைபெறுகிறேன்.

நன்றி.

வணக்கம்

SOURASHTRA CHAMBER OF COMMERCE
BOARD OF MEMBERS
YEAR 2024-2026

Office Bearers	Designation	Contact
K.K. Dinesh	President	98421 16461
T.R. Mohanram	Imm. Past President	93441 01432
K.K. Kubendran	Vice President	93441 25647
A.B. Kumaresh Babu	General Secretary	93443 04980
V.V. Ramlakshmanji	Treasurer	94439 30728
S.G. Srinivasan	Joint Secretary	91500 99456
T.N. Suriyaprakash	Joint Secretary	93441 52068
V.G. Ramdoss	External Aff. / EC Member	93441 00360
J.S. Sayee Jeevan	EC Member	90809 51577
A.R. Ganesan	EC Member	98421 75804
B.S. Janaarthanan	EC Member	97905 75650
T.K. Sivanath Babu	EC Member	94423 27081
S.M. Karthi Kumaran	EC Member	94438 31496
S.K.B. Chandraprakash	EC Member	98655 45048
N.S. Prem Kumar	EC Member	99944 35350
K.K. Dinakaran	EC Member	98409 60833
K.V. Kumaresan	EC Member	98940 51735
S.S. Ramsundar	EC Member	93441 22181
E.R.K. Vignesh Babu	EC Member	94422 44648
T.M. Rubesh Babu	EC Member	95000 35200
S.S. Premkumar	EC Member	96293 42295
S.R. Sundarnath	EC Member	92444 03917
M.M. Dhanasekaran	EC Member	98421 58085
K.B. Sivaprakash Babu	EC Member	94433 66251
T.K. Yageshwaran	EC Member	99524 22260

Past Presidents cum EC Members		Contact
K.V. Bala, Senior President	- Yr. 2007-2009	044 2833 0867
C.K. Sekar	Yr. 2009-2011	97900 77111
E.R. Kumaresan	Yr. 2011-2013	93674 66777
K.K.G. Prabhakaran	Yr. 2013-2015	98409 60845
S.K.R. Ramesh	Yr. 2015-2017	96552 34409
M.K. Kaladhar Babu	Yr. 2017-2019	99944 84443
Kumaran B. Jaghuva	Yr. 2019-2022	99949 26348
Advisors		
K.K. Surendranath		98409 88810
T.K.D. Mohan		98430 52530

Patron Members	
K.K. Surendranath	M/s. Varuni Chemicals
K.S. Ravindranath	M/s. Indowind Energy Ltd., Chennai
M.K. Jawahar Babu	M/s. Jawahar Babu
K.R.M. Niranjan Kumar	M/s. India Ultra Sound, Calicut
E.R. Kumaresan	M/s. V.P.C. Textiles
M.R. Krishnamoorthy	M/s. PT. Kewalram, Indonesia
T.S. Sivaprakash	M/s. Shree Sivabalaji Steels (P) Ltd.,
(Late) K.B. Mohan	M/s. K.B. Mohan, Engineering
T.L. Dukaram	M/s. Anezlina Cosmos
T.L. Sabari Babu	M/s. Sowbhaagyaas Gold & Diamond
B.V. Ramesh	M/s. Karpagam Motors
T.E. Yogesh	M/s. The Constructive Company
L.G. Padmanabhan Iyer	M/s. Karishma Electro Platers, Mumbai

Editorial Board	Designation	Contact
K.K. Gnana Prabhakaran	Publisher	98409 60845
E.R.K. Vignesh Babu	Chairman	94422 44648
K.S. Sivakumar	Member	93441 51331
Bhaskar Laguduva	Member	82178 93697
K.K. Shankar	Member	97881 62559
K.K. Ramkumar	Member	98421 40007



பொதுச்செயலாளர் அறிக்கை

உறுப்பினர்களுக்கு வணக்கம்

- A.B. குமரேஷ் பாபு

27.08.2026 – ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக அரசு தொடர்புக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தார்.

01.09.2026 – ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 12வது செயற்குழு கூட்டம் சேம்பர் அரங்கில் நடைபெற்றது. குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

05.09.2026 – சிட்கான் 2026 மாநாட்டின் வெற்றி விழா கூட்டம் குற்றாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 19ம் ஆண்டு பொதுக் குழு கூட்டம் வருகிற 25.09.2026 அன்று காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. அதற்கான அறிவிப்பு நோட்டீஸ் அனைவருக்கும் இத்தருணத்தில் கிடைத்திருக்கும். இந்த மாத இதழிலும் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம்.

2024-2026 ஆகிய இரண்டு ஆண்டுகால நிர்வாக செயல்பாடுகள் நம் சேம்பர் உறுப்பினர்களை சரியான முறையில் அணுகியிருக்கும் என்று நம்புகிறேன்.

2026-2028ம் ஆண்டிற்கு புதிதாக பொறுப்பேற்கும் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி.



இதழ்குழுத் தலைவர் அறிக்கை

உறுப்பினர்களுக்கு வணக்கம்

- E.R.K. விக்னேஷ் பாபு

சிட்கான் 2026 மாநாடு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. லாப் ஸமாச்சார் குழுவினரின் பொறுப்பில் மாநாட்டு மலர் பணி மேற்கொள்ளப்பட்டு மாநாட்டில் வெளியீடும் செய்யப்பட்டது. நமது ஆயுட்கால உறுப்பினர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் அனைவருக்கும் இந்தப் பிரதி கூரியர் மூலம் வந்தடைந்திரக்கும் என்று நம்புகிறேன். கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாக செய்து முடித்துள்ளேன் எனக் கருதுகிறேன்.

இந்த இரண்டு ஆண்டுகள், எங்களது லாப் ஸமாச்சார் குழு, சரியான நேரத்தில் இதழை வெளிக்கொண்டு வந்துள்ளது. இடையில், இதழுக்கான உரிமம் சார்ந்த பிரச்சனை ஏற்பட்டது. அதனை இதழின் மூத்த ஆசிரியர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்களின் முயற்சியல் சீர் செய்யப்பட்டது. அதோடு, ஆகஸ்ட் மாத லாப் ஸமாச்சார் இதழ் அவர்களின் கரங்களாலேயே வெளியீடும் செய்யப்பட்டது. இதனை அவர் பெரு மகிழ்ச்சியாக கருதியது எங்கள் குழுவினருக்கு மகிழ்ச்சியளித்தது. மேலும், எங்களின் இரண்டாண்டு கால பணியைப் பாராட்டிப் பேசினார்.

பல்வேறு சூழல்களில், பலதரபட்ட தொழில்முனைவோர்களை சந்தித்து இதழ் வெளியீடு செய்து, நமது லாப் ஸமாச்சார்-ன் இதழுக்கான நற்பெயரை உயர்த்தியுள்ளோம் என்று நம்புகிறோம். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் பற்றி பிற சமுதாய மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள நற்பெயர் தொழில் முனைவோர்களின் சந்திப்புகளில் காணமுடிந்தது. எங்கள் குழுவினருக்கு கிடைத்த வரவேற்புகள், அனுபவங்கள் மறக்க முடியாதது.

இந்த மாபெரும் வாய்ப்பைத் தந்த சேம்பருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு விடைபெருகிறேன். நன்றி.

சிட்கான் 2026 தொழில் வர்த்தக கண்காட்சியில் பொதுமக்களுக்கு குலுக்கல் முறையில் பரிசுப்பொருட்கள் வழங்கிய நிறுவனங்கள் மற்றும் கணவான்கள்

1. சக்தி பேப்ரிக்ஸ்
2. கலர்ஸ் அட்வெர்டைசிங் ஏஜென்சி
3. திரு. என்.பி. சரவணக்குமார்
4. திரு. ஸ்ரீதர்
5. திரு. எல்.பி. அசோக் குமார்
6. சௌந்தர்யா டிரேடர்ஸ்
7. திரு.எம்.ஆர். முரளிதரன்
8. ஐஸ்வர்யா டெக்ஸ்டைல்ஸ்
9. செவன்சீ இண்டெர்நேஷனல்
10. ஜியோ ஆர்ட்ஸ்
11. திருமதி. ஜெயலட்சுமி
12. சத்யபாமா கேட்டரிங்
13. பிளான் & பிள்ட்
14. திரு. ஜெ.ஆர். விஜயராகவன்
15. பார்கவி ஃபோட்டோ ஸ்டுடியோ
16. திரு. ஜெ.ஆர். பிரேம் குமார்
17. பகத்சிங் கம்ப்யூட்டர் ஃபர்னிச்சர்

திருக்குறள்

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு

பொருள்: கற்றறிந்தார் சபையில் விவாதிக்கும்போது, சபைக்கு அஞ்சாமல், தம்முடன் விவாதிக்கிறவருக்கு எதிர்மொழி சொல்லுவதற்காகச் சொல்லவேண்டியதை மட்டும் ஒழுங்குமுறைக்கு ஒத்த அளவோடு கண்டித்துப் பேச வேண்டும்.

அதிகாரம் 73 அவை அஞ்சாமை அங்கவியல்

ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்

Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account

Name
Sourashtra Chamber of Commerce
Bank
State Bank of India
Acct. No.
30134805614
Branch
Madurai City
IFSC
SBIN0011544

Best Compliments

BVK GROUP



Bala V Kutti
Founder & Chairman

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.

Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

இனிய வேத கோஷம்

வேதம் என்றால் ஞானம் அறிவு என்று பெயர். கடவுளை அறிதல், போற்றுதல், கடவுளுக்கு வேள்வி ஆற்றுதல் போன்ற கருப்பொருள்களை உள்ளடக்கமாகக் கொண்டவை. ஒன்றாக இருந்த வேதத்தை, நான்காகப் பிரித்தவர் வேத வியாசர். ஸம்ஸ்கிருத மொழியுள்ள வேதங்களை, குரு சொல்வதை, சிஷ்யன் கேட்டு பரம்பரையாக போதித்து, ஸ்ருதி என பெயர் பெற்று, பல யுகங்களாக செயல்படுத்தி வந்துள்ளது. வேதம் உலகப் பொதுமறை. நமது இந்து கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் அடிப்படையானது. வாழ்க்கை முறை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. அவ்வழி செம்மையாக அடைய வழி வகுக்கிறது.

வேதம் இறைவன் வெளிப்படுத்தியதால், மனிதர்களுக்கு, சூரியன் ஒளி போல், வீசும் மெல்லிய காற்று போல், பருகும் தூய நீர் போல், நலன்களை பயப்பதாகும். ஸர்வே ஜனா ஸுகினோ பவந்து அனைத்து மக்களும் சுகமடையட்டும் என்கிறது.

மனிதர்கள் தங்களது ஆளுமையை வளர்த்துக் கொண்டு முழுமையான சக்தி மிக்கவர்களாக தங்களை ஆக்கிக்கொண்டு, பூர்ணத்துவத்தை வெளிப்படுத்தி, சக உயிர்களோடு ஒற்றுமையோடு வாழ்ந்து, மெய்ஞானத்தை உணர்த்தி வாழச் செய்யும் உயர்ந்த வாழ்வினை உள்ளடக்கியதே வேதாந்த தத்துவங்களாகும்.

ஓம் எனும் ப்ரணவம் அடி வயிற்றிலிருந்து ஒலிக்கும் ஓம்காரமும், அதை தொடர்ந்து ஸ்பஷ்டமான வேத கோஷங்களும், காதுகளுக்கும் மனத்துக்கும் சுகம் தருபவை. இப்போது அவை பிரகாசமான வாழ்வுக்கும் வழி காட்டுகிறது.

வேத மந்திரங்கள் ஒலிக்கின்ற இடங்களில் தீய சக்திகள் விலகுகின்றன. மஹாலக்ஷ்மி வாசம் செய்வதால் ஐஸ்வர்யம், தெய்வாம்சம் உண்டாகும். நம் பாரதநாடு கலாச்சாரம், பண்பாடு, சாஸ்திர சம்பிரதாயங்களில் உலகமே வியக்கும் வண்ணம் மேன்மை பெற்று விளங்குகிறது. அதற்கு காரணம் அன்றாட வாழ்க்கை முறைகள் வேதங்களை அடிப்படையாக கொண்டவை.

சதுர்வேதங்களில் 108 உபநிஷத்துக்கள் உள்ளன. நூற்றுக்கணக்கான சிறு பகுதி கொண்ட, நன்கு சொல்லப்பட்ட பல்வேறு தெய்வங்களில் சூக்தங்கள் உள்ளன. அவைகளில் பஞ்ச சூக்தங்கள் முக்கியமானவையாகும்.

பக்தன் ஒருவன் திருக்கோவிலுக்கு சென்று இறைவனை வழிபட்டு வரும்போது, இறையருள் கிடைத்திருக்கிறதா? இல்லையா என எப்படி தெரிந்துகொள்வது? வேத பாராயணம் செய்யும் இடத்தில், வேத மந்திரங்கள் லயித்து கேட்டால் இறையருள் கிடைத்திருக்கிறது என அறியலாம்.

வேத அத்யயனம் (வேத பாராயணம் செய்வது) வேத அத்யாபனம (வேதத்தை பிறருக்கு கற்றுத்தருவது) நடக்கத்தான் வேண்டும். லோக க்ஷேமத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையாகும். வேத பாராயணம் செய்வதால், செய்விப்பதால், உலகில் நன்மை பெருகி நன்மை உண்டாகும். அத்தகைய சக்தி வேத மந்திரங்களுக்கு இருக்கிறது.

வந்தே மாதரம்!... லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து.

குறிப்பு: கட்டுரையாளர், ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் வேத பாடசாலை அத்யாபகர் (வாத்தியார்)
கே.ஆர். ராமாச்சாரி ஆவார். தங்கள் இல்லத்தில் வேத பாராயணம் செய்ய
தொடர்புக்கு: 94421 47694

இதழ் வெளியீடு



2024-2026ம் ஆண்டு நிர்வாகத்தில், லாப் ஸமாச்சார்-ன் ஒவ்வொரு மாத இதழையும், இதன் குழு முக்கியப் பிரமுகர்களின் கரங்களால் வெளியீடு செய்து வருகின்றது. தினமலர் நாளிதழ் தலைவர் திரு. ராமசுப்பு அவர்களிடமிருந்து துவங்கி, தங்கமயில், வேல் மருத்துவமனை, அருணா அலாய், வேலம்மாள் மருத்துவ குழுமம் என தொடர்ந்து, அரசியல் பிரமுகர், அப்போதைய தமிழக பா.ஜ.க. தலைவர் திரு. அண்ணாமலை, தற்போது தமிழக மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு. சி.டி.ஆர். நிர்மல் குமார், மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு. நிர்மலா சீதாரமன் அவர்களையும் சந்தித்து இந்த மாத இதழை அறிமுகம் செய்து வெளியீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிர்வாகத்தின் இறுதி நிலையில், இக்குழுவின் கடைசி வெளியீடாக, சென்ற மாத இதழை, லாப் ஸமாச்சார் இதழின் மூத்த ஆசிரியர், ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவர் திரு. கே.கே.ஜி. பிரபாகரன் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. லாப் ஸமாச்சார் மாத இதழ் மத்திய அரசின் பதிவைப் பெற்று தபால் சலுகை பெற பெரும் முயற்சி மேற்கொண்டவர். சமீபத்தில், பத்திரிக்கைத் துறை டிஜிட்டல் மயமாக்கலால் ஏற்பட்ட உரிமம் சார்ந்த பிரச்சனைக்கு டெல்லி வரை சென்று தீர்வுகண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலே புகைப்படத்தில், லாப் ஸமாச்சார் குழு ஒருங்கிணைப்பாளர் திரு. இ.ஆர்.கே. விக்னேஷ் பாபு அவர்களோடு, சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ், துணைத் தலைவர் திரு. கே.கே. குபேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

ஜிஎஸ்டி கூட்டம்



மதுரையில் ஜிஎஸ்டி மாதாந்திர குறைதீர்க்கும் நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் 27.08.2026 அன்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக கோரிக்கை மனுவை ஸௌ. சேம்பர்-ன் ஜி.எஸ்.டி குழு சேர்மன் திரு. என்.எஸ். பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அதிகாரிகளிடம் அளித்தார். சேவைத் துறை விதிக்கப்பட்டுள்ள ரூ. 20 லட்சம் வரையிலான ஜிஎஸ்டியை ரூ. 40 லட்சம் வரை நிர்ணியிக்க வேண்டும் என்பது பிரதான கோரிக்கையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

Micro, Small and Medium Enterprises Development (Amendment) Bill, 2026

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மசோதா 3 ஆகஸ்ட் 2026 அன்று ராஜ்யசபாவிலும், 7 ஆகஸ்ட் 2026 அன்று மக்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

MSMED Act எனப்படும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006-ல் கொண்டு வரப்பட்டது. தற்போது அது 20 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சி, IT சார்ந்த சேவைகள் மற்றும் சட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப MSME துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

Udyam-ல் பதிவு செய்யப்பட்ட னிறீனிசி நிறுவனங்களின் எண்ணிக்கை 01.04.2023 அன்று 1.65 கோடியாக இருந்தது; தற்போது 9.16 கோடியாக அதிகரித்துள்ளது. MSME துறை இந்தியாவில் 40 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது. எனவே இது இந்திய பொருளாதாரத்தின் முக்கியமான அடித்தளமாக கருதப்படுகிறது.

முக்கியமான மாற்றங்கள்

1. **MSME வகைப்பாடு**

MSME நிறுவனங்களை வகைப்படுத்துவதற்கு இரண்டு முக்கிய அளவுகோல்கள் பயன்படுத்தப்படும்:

* தொழிற்சாலை / இயந்திரங்களில் செய்யப்பட்ட முதலீடு
* நிறுவனத்தின் ஆண்டு வருமானம் (Turnover)

மேலும், Udyam Registration Portal ஒரு நிரந்தரமான, இலவசமான மற்றும் டிஜிட்டல் பதிவு தளமாக தொடரும்.

MSME பதிவு செய்வது விருப்பமானது (Voluntary).

2. **பணம் தாமதமாக வழங்கப்படுவதற்கு தீர்வு**

Micro மற்றும் Small Enterprises-க்கு விற்பனை செய்த பொருட்கள் அல்லது சேவைகளுக்கான பணம் தாமதமாக கிடைக்கும் பிரச்சினையைத் தீர்க்க புதிய நடைமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

Online Dispute Resolution மூலம் பிரச்சினைகளை விரைவாகவும் குறைந்த செலவிலும் தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு அல்லது Award-ஐ ரத்து செய்யும் மனு ஆறு மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்தால், Micro மற்றும் Small Enterprise-க்கு வழங்கப்பட்ட தொகையில் குறைந்தது 50% தொகையை செலுத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்ற விதியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

3. **Payment dispute-களை விரைவாகத் தீர்ப்பது**

தாமதமான பணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* Mediation நடைமுறை 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
* Mediatioஜ தோல்வியடைந்தால், 30 நாட்களுக்குள் Arbitration-க்கு அனுப்ப வேண்டும்.
* Pleadings முடிந்த பிறகு, Award 90 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

இதன் நோக்கம் னிறீனிசி நிறுவனங்களுக்கு வர வேண்டிய பணம் தொடர்பான வழக்குகள் நீண்ட காலம் நிலுவையில் இருப்பதைத் தவிர்ப்பதாகும்.

4. **நிலுவைத் தொகையை வசூலிக்க வலுவான நடைமுறை**

Mediation மூலம் ஏற்பட்ட settlement அல்லது Arbitration Award மூலம் கிடைக்க வேண்டிய தொகையை, சில சூழ்நிலைகளில் நில வருவாய் நிலுவைத் தொகை போல (arrear of land revenue) வசூலிக்க முடியும்.

இதற்காக District Collector, Deputy Commissioner அல்லது அரசு அறிவிக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரி மூலம் வசூல் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

5. **MSME நிறுவனங்களுக்கு விரைவான பணப்பரிவர்த்தனை**

Central Public Sector Enterprises (CPSEs), MSME நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான invoices-ஐ TReDS (Trade Receivables Discounting System) தளம் மூலம் settlement செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TReDS என்பது MSME நிறுவனங்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய invoice தொகையை விரைவாகப் பெற உதவும் ஒரு அமைப்பு.

TReDS மூலம் invoice discounting அளவு:

* 2022–23: ₹40,000 கோடி
* 2025–26: ₹3.47 லட்சம் கோடி

என அதிகரித்துள்ளது.

இதன் மூலம் MSME நிறுவனங்களுக்கு பணப்புழக்கம் (Liquidity) மேம்படவும், payment தாமதம் குறையவும் உதவும்.

6. **MSME Facilitation Councils அதிகரிக்கப்படும்**

MSME நிறுவனங்களுக்கு வர வேண்டிய பணம் தொடர்பான disputes-ஐ விரைவாகத் தீர்க்க, மாநில அரசுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட Micro and Small Enterprises Facilitation Councils (MSEFCs) அமைக்க முடியும்.

இதன் மூலம் வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு தீர்வு காணப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாநில அரசுகளுக்கு MSEFC தொடர்பான விதிகளை உருவாக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

7. **Criminal punishment குறைக்கப்படுகிறது**

MSME சட்டத்தில் சில விதிகளைப் பின்பற்றாததற்காக முன்பு இருந்த conviction மற்றும் criminal fine போன்ற தண்டனைகளுக்கு பதிலாக, படிப்படியாக அதிகரிக்கும் civil penalties கொண்டு வரப்படுகின்றன.

உதாரணமாக தவறான தகவல் கொடுத்தால்:

முதல் முறை ⟶ எச்சரிக்கை

இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த முறை ⟶ அபராதம்

அதேபோல், வாங்கிய பொருட்களுக்கான நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டியை annual accounts-ல் குறிப்பிடாத buyers-க்கும்:

முதல் முறை ⟶ எச்சரிக்கை

இரண்டாவது முறை ⟶ அபராதம்

மூன்றாவது மற்றும் அடுத்தடுத்த முறை ⟶ Fine

என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் நோக்கம் MSME துறையில் தேவையற்ற criminal நடவடிக்கைகளை குறைத்து, நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட business environment உருவாக்குவதாகும்.

மொத்தத்தில் இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கம்

இந்த மாற்றங்களின் மூலம்:

* MSME நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்
* Business செய்வதை எளிதாக்குதல்
* MSME நிறுவனங்களுக்கு வர வேண்டிய பணம் தாமதமாகாமல் பாதுகாத்தல்
* Payment disputes-ஐ விரைவாகத் தீர்த்தல்
* நிலுவைத் தொகையை வசூலிப்பதை எளிதாக்குதல்
* Udyam Registration முறையை வலுப்படுத்துதல்
* தேவையற்ற criminal penalties-ஐ குறைத்தல்
* MSME நிறுவனங்கள் சிறிய அளவிலிருந்து பெரிய நிறுவனங்களாக வளர உதவுதல்

ஆகியவை முக்கிய நோக்கங்களாக உள்ளன.

இந்தச் சட்டத் திருத்தங்கள் Viksit Bharat @2047 என்ற அரசின் நோக்கத்துடன் இணைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலுவான MSME துறை இந்தியாவின் நிலையான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம்: உரிய நேரத்தில் கடன் ஆதரவு மூலம் வணிகங்களை வலுப்படுத்துதல்

இசிஎல்ஜிஎஸ் 5.0 எனப்படும் 5-ம் கட்ட அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம், பல்வேறு இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்குத் தேவையான கடன் உத்தரவாத ஆதரவை வழங்கி வருகிறது. தேசிய கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது அரசு ஆதரவுடனான உத்தரவாதங்கள் வாயிலாகக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தகுதியுள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் விமான நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கிறது.

கொவிட்-19 பெருந்தொற்றின் போது அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் முந்தைய கட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, தற்போது இது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. விரிவான அணுகுமுறை, ஜன் சமர்த் வலைதளம் மூலமான டிஜிட்டல் நடைமுறை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் தீவிரப் பங்களிப்பு ஆகியவை இதன் பரவலை விரிவுபடுத்தியுள்ளன. பணப்புழக்கத்தை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பைப் பாதுகாத்தல் மற்றும் விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், ஐந்தாம் கட்ட அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது.

நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்:

மாறிவரும் உலகளாவிய புவிசார் அரசியல் சூழல்களுக்கு மத்தியில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கும், வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும், தடையற்ற வணிகச் செயல்பாடுகளை உறுதி செய்வதற்கும் இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. இத்தகைய சவால்களை எதிர்கொள்ளும் வகையில், 2026 மே 5 அன்று அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம் 5.0-க்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இது தகுதியுள்ள வணிகக் கடன் பெறுநர்களுக்குக் கூடுதல் செயல்பாட்டு மூலதனத்தை வழங்குவதற்காக, அரசு ஆதரவுடனான கடன் உத்தரவாதங்களை வழங்குகிறது. ரூ.2.55 லட்சம் கோடி வரையிலான கூடுதல் கடன் விநியோகத்தை எளிதாக்குவதையும், தடையற்ற உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவளிப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. முதன்மை

முக்கிய அம்சங்கள்:

இசிஎல்ஜிஎஸ் 5.0 திட்டமானது, 2027 மார்ச் 31 வரை அல்லது ரூ.2.55 லட்சம் கோடி மதிப்பிலான உத்தரவாதங்கள் வழங்கப்படும் வரை, இவற்றில் எது முந்தையதோ அதுவரை செயல்பாட்டில் இருக்கும்.

அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகள், அட்டவணைப்படுத்தப்பட்ட நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தகுதியுள்ள வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டம் அனைத்துத் துறைகளிலும் செயல்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டம், ஒழுங்குபடுத்தப்பட்ட சலுகை வட்டி விகிதங்களில் எளிதாகக் கடன்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது.

திட்டத்தின் முன்னேற்றம்:

இசிஎல்ஜிஎஸ் 5.0 திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. 2026 ஆகஸ்ட் 20 நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6,73,979 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒட்டுமொத்தத் தொகை ரூ.2,50,024 கோடியை எட்டியுள்ளது.

தகுதியுள்ள கடன் பெறுநர்கள் ஜன் சமர்த் இணையதளமான **https://www.jansamarth.in/home** பயன்களைப் பெறலாம்.

(பதிவு எண்: 26/2007)

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

161F, சாலை பிள்ளையார் கோவில் தெரு, காமராஜர் சாலை, மதுரை – 625 009.
போன்: 262 99 55, 93441 97952, மின்னஞ்சல்: sourashtra.chamber@gmail.com
இணையதள முகவரி: www.sourashtrachamber.com

பெறுநர்: தேதி: 02.09.2026

அனைத்து உறுப்பினர்கள்

வருடாந்திர பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு

நமது சேம்பரின் **பத்தொன்பதாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்** வருகின்ற 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** அரங்கில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அவ்வமயம் கீழ்காணும் விஷயங்கள் குறித்து தீர்மானம் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம் :–

1. 31.3.2026 ம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்குழு அறிக்கை சமர்ப்பித்தல்
2. 2025–2026 தணிக்கையாளர் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பெற்ற வரவு–செலவு கணக்குகளை அங்கீகரித்தல்
3. 2026–2027ம் ஆண்டிற்கான தணிக்கையாளரை நியமித்து அவரது கட்டணத்தை நிர்ணயித்தல்
4. 31.03.2026 வரை உள்ள அங்கத்தினர்கள் பட்டியல் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல்.
5. 2026–2028ம் ஆண்டிற்கான இருபத்தி நான்கு (24) செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.
6. 2026–2028ம் ஆண்டிற்கான நிர்வாகக்குழுவைத் தேர்ந்தெடுத்தல்.
7. இதர விஷயங்கள், தலைவரின் அனுமதியுடன்.

K.K. **தினேஷ்**
தலைவர்

A.B. **குமரேஷ் பாபு**
பொதுச் செயலாளர்

மதிய உணவு 12.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947), 6-ஆம் பிரிவின் கீழ்

தமிழ்நாட்டில் அனைத்து நிறுவனங்களையும், மேலும் மூன்று ஆண்டுகள் காலத்திற்கு,

365 நாட்களிலும் திறந்து வைத்திருக்க அனுமதி

G.O. (Rt.). No.231, Labour Welfare and Skill Development (K2), 24th August 2026,

1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947), 6-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23.03.2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II பிரிவு 2-இல் 1-3 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் II(2)/LWSD/174(a) / 2023-ஆம் அறிவிக்கையைத் தொடர்ந்தும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பொது நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து நிறுவனங்களையும் மேற்சொன்ன சட்டத்தின் 11-ஆம் பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின் விதித்துறைகளிலிருந்து விலக்களித்து, அவை திரும்பப் பெறப் பெற்றாலன்றி, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இவ்வறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, அதாவது 24.08.2026 முதல் செயலுக்கு வரும் வகையில் தமிழ்நாடு மாநிலத்திலிருக்கும் அனைத்து நிறுவனங்களையும், மேலும் மூன்று ஆண்டுகள் காலத்திற்கு, ஆண்டின் அனைத்து 365 நாட்களிலும் திறந்து வைத்திருப்பதற்கு இதனால் அனுமதிக்கிறார். அவையாவன:-

★ ஒவ்வொரு பணியாளருக்கும் சுழற்சி முறையில் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டும், ஒவ்வொரு பணியாளரின் விவரங்களும், தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள 'படிவம் S' இல் அளிக்கப்பட்டு, நிறுவனங்களில் நன்கு தெரியும் வகையிலான இடத்தில் வேலையளிப்பவரால் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு வேலையளிப்பவரும், நாள்தோறும், விடுமுறையில் / விடுப்பில் இருக்கும் பணியாளர்களின் விவரங்களை நிறுவனங்களில் நன்கு தெரியும் வகையிலான இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

★ மிகைநேரப் பணி ஊதியங்கள் உட்பட, பணியாளர்களின் ஊதியங்கள், அவர்களது சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

★ வேலையளிப்பவர், அங்கு பணியமர்த்தப்படும் யாதொரு நபரையும், யாதொரு நாளிலும் எட்டு மணி நேரத்திற்கு மிகையாக, யாதொரு வாரத்திலும் நாற்பத்து எட்டு மணி நேரத்திற்கு மிகையாகப் பணிபுரிவதற்குக் கோரவோ அனுமதிக்கவோ கூடாது. மேலும், மிகைநேரப் பணி உட்பட, பணிபுரியும் கால அளவானது, யாதொரு நாளிலும் பத்தரை மணி நேரத்திற்கு மிகாமலும், வாரம் ஒன்றிற்கு ஐம்பத்து ஏழு மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

★ மிகைநேரப் பணிக்கான முறையான தேவைக் கோரிக்கை இல்லாமல், யாதொரு விடுமுறை நாளில் அல்லது வழக்கமாக பணி நேரங்களுக்குப் பின்னர் பணியாளர்கள் பணிபுரிவதாகக் கண்டறியப் படுமாயின், 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, வேலையளிப்பவர் மீது தண்டத்தொகை விதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வழக்கமான சூழல்களில், பெண் பணியாளர்களை இரவு 8.00 மணிக்கு மேல் பணிபுரியுமாறு கோரக்கூடாது. இருப்பினும், பெண் பணியாளரின் மதிப்பு, மரியாதை மற்றும் பாதுகாப்பிற்கு தக்க நடவடிக்கைகளை வேலையளிப்பவர் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அப்பெண் பணியாளரிடமிருந்து எழுத்துவடிவ ஒப்புதல் பெற்ற பின்னரே, அப்பெண் பணியாளரை இரவு 8.00 மணி முதல் காலை 6.00 மணி வரை பணி செய்ய அனுமதிக்க வேண்டும்.

★ முறைமாற்றுப் பணிகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு, போக்குவரத்து வசதிகளுக்கு வகை செய்யப்பட வேண்டும். இவ்வகையில், போக்குவரத்து வசதிகள் கிடைக்கப்பெறுவதைக் குறிப்பிடும் அறிவிப்பு ஒன்று, நிறுவனத்தின் முதன்மை நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

★ பணியாளர்களுக்கு ஓய்வறை, கழிவறை, பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

★ பெண் பணியாளர்களைப் பணியமர்த்தும் ஒவ்வொரு வேலையளிப்பவரும், 2013-ஆம் ஆண்டு பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/2013) கீழ் பெண்கள் மீதான பாலியல் தொல்லைகளுக்கு எதிராக, 'உள் புகார்கள் குழு' ஒன்றை அமைக்க வேண்டும். மேற்சொன்ன குழு செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

★ 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதித்துறைகளுடன், மேற்சொன்ன வரையறைகளும் நிபந்தனைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

★ சட்ட விதித்துறை அல்லது மேற்சொன்ன வரையறைகளில் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுவது, ஆய்வாளரால் அல்லது ஏனைய வகையில் கண்டறியப்படும் நேர்வில், 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு வேலையளிப்பவருக்கு எதிராக தண்டனையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- L.V. Jothiprakash
Advocate & Labour Management Consultant,
Cell: 98422 64144

மாவட்டங்களை ஏற்றுமதி மையங்களாக்கும் முன்னெடுப்பு

நாட்டின் ஏற்றுமதியை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துதல்

இந்தியாவின் ஏற்றுமதிப் வளர்ச்சியைக் பயணம் குறிப்பிடத்தக்க கண்டுள்ளதுடன், இந்த வேகத்தைத் தொடர ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமாகிறது. ஒவ்வொரு மாவட்டத்தையும் ஏற்றுமதித் திட்டமிடல் மையமாக மாற்றுவதே மாவட்டங்களை ஏற்றுமதி மையங்களாக்கும் முன்னெடுப்பின் (டிஇஹெச்) முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம், உலகளாவிய சந்தை வாய்ப்புகளைக் கொண்ட பொருட்கள், சேவைகளைக் கண்டறிந்து உள்ளூர் உற்பத்தியாளர்கள் சர்வதேச சந்தையுடன் இணைப்பைப் பெறுகின்றனர். ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள், நிறுவனங்கள், தொழில்துறைகளை ஒருங்கிணைக்கும் கட்டமைப்பாக இது விளங்குகிறது. மாவட்டங்களின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை உலகளாவிய சந்தையுடன் இணைப்பதன் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதோடு குறு, சிறு, நடுத்தரத் மூலம் தொழில் நிறுவனங்கள் பலம் பெறுகின்றன.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஏற்றுமதி முக்கிய பங்கு வகிக்கிறது. வெளிநாட்டுச் சந்தைகள் மூலம் ஈட்டப்படும் ஒவ்வொரு ரூபாயும் உள்நாட்டில் வேலைவாய்ப்புகளையும், வருவாயையும், தொழில்துறையையும் மேம்படுத்துகிறது. இந்தியாவின் மொத்தப் பொருட்கள், சேவைகள் ஏற்றுமதி 2024-25-825.25 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டி நகரங்களைச் மாவட்டங்கள் சாதனை படைத்துள்ளதுடன், 2025-26-ல், சுமார் 863.11 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. பல தசாப்தங்களாக ஏற்றுமதி நடவடிக்கைகள் குறிப்பிட்ட சில தொழில்துறை மையங்கள், துறைமுக சுற்றியே இருந்து வந்தன. பல சிறு நகரங்கள், தனித்துவமான, உயர்தரப் பொருட்களைக் கொண்டிருந்தபோதிலும் ஏற்றுமதிப் பட்டியலில் இடம்பெறாமல் இருந்தன. இந்த நிலையை மாற்றியமைக்க மாவட்ட அளவிலான ஏற்றுமதி வியூகத்தை ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவத்தையும் பயன்படுத்தி ஏற்றுமதி வளர்ச்சியை அதிகரிக்க அரசு முன்னெடுத்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவும், ஏற்றுமதித் திறனை வெளிக்கொணரவும் மாவட்டங்களை ஏற்றுமதி மையங்களாக மாற்றும் முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நிறுவனங்கள் உலகளாவிய சந்தைகளை அணுகவும், போட்டித்தன்மையை மேம்படுத்தவும், மாவட்ட அளவிலான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இது உதவுகிறது. தற்சார்பு இந்தியா இயக்கத்துடனும், உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்ற பரந்த தொலைநோக்குப் பார்வையுடன் இத்திட்டம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இத்திட்டம், நாட்டின் 770-க்கும் மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டம் நிதி வழங்கும் திட்டமாக மட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைக்கும் கட்டமைப்பாகச் செயல்படுகிறது. தற்போது செயல்பாட்டில் உள்ள மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களின் கீழ் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி ஏற்றுமதி, உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஏற்றுமதி சார்ந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதன் மூலம் போட்டித்தன்மை மேம்படுத்தப்படுகிறது. குழுக்களும், மாவட்ட அளவில் மாவட்ட ஏற்றுமதி ஊக்குப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு மாநில அளவில் ஏற்றுமதி ஊக்குப்புக் வாய்ப்புகள் ஏற்றுமதி கண்டறியப்பட்டு நடைமுறைச் சிக்கல்கள் தீர்க்கப்படுகின்றன. மாவட்ட ஏற்றுமதிச் செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்கட்டமைப்பு, தளவாட வசதிகள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தேவையான நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

உள்ளூர் பொருட்கள் சர்வதேச தரநிலைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தரம், பரிசோதனை வசதிகள், பேக்கேஜிங், வர்த்தக முத்திரை, சான்றிதழ்கள் பெறுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. டிஜிட்டல் அணுகல் தொலைதூரப் பகுதிகளில் உள்ள வணிகங்களுக்கும் பரந்த சந்தை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. அஞ்சலக ஏற்றுமதி மையங்கள் குறைந்த கட்டணத்தில் ஆவணங்கள், பேக்கேஜிங் சேவைகளை வழங்குகின்றன.

1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை நோக்கி நாடு முன்னேறிவரும் வேளையில், மத்திய அரசு, மாநிலங்கள், மாவட்டங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மூலம் மாவட்டங்களின் உற்பத்தித் திறன் ஏற்றுமதி வாய்ப்புகளாக மாறி வருகின்றன. இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பு இந்தியாவின் ஏற்றுமதிச் சூழலமைப்பை மேலும் வலுப்படுத்தி வருகிறது.



Census of India 2027

சென்சஸ் 2027 - ஜாதிவாரி கணக்கெடுப்பு & தாய்மொழி (சௌராஷ்ட்ரா மக்களுக்கு)

சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என்று மட்டுமே (பிற வார்த்தைகளை உபயோகிக்காமல்) பதிவிட வேண்டுமென வீட்டுக்கு வீடு அதி தீவிர பிரச்சாரத்தை, மத்திய சபை, அனைத்து ஊர் சபைகள், சமூக சேவை அமைப்புகள் இளைஞர் அமைப்புகள், கல்வி & கலாச்சார அமைப்புகள் செப்டம்பர் முதல் 2026 டிசம்பருக்குள் செய்ய வேண்டியது அவசியம். அப்போதுதான், தாய்மொழி, ஜாதி இரண்டு வகை தலைக் கணக்கிற்கும் குறிப்பிடத்தகுந்த வித்யாசம் இருக்காது.

1. ஜாதி பற்றிய கேள்வி

சௌராஷ்ட்ரா என்பது மொழிவாரி இனம் என்றாலும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் ஜாதி ஆகவும் குறிப்பிடப்படுகிறது. எனவே ஜாதி வாரி கணக்கெடுப்பில் கவனம் அவசியம்.

10	Scheduled Caste (SC)/Scheduled Tribe (ST)/Caste	Explicit category and specific caste name declaration

மொத்தம் 40 கேள்விகளில், 2027 பிப்ரவரியில் 10 வது கேள்வியாக ஜாதி பற்றிய கேள்வியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் SC /ST க்கு மட்டுமே பட்டியல் இருக்கும். நாம் உட்பட பிற எந்த ஜாதிக்கும் ஜாதி பெயர் பட்டியல் இருக்காது நாம் தான் சொல்லவேண்டும்/எழுதவேண்டும் எனவே அதிக கவனம் தேவை.

சௌராஷ்ட்ரர்கள் அனைவரும் ஒரேமாதிரியாக, ஜாதி- சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என்று மட்டுமே எழுதவேண்டும் வேறு வார்த்தைகள் உதாரணமாக பட்டுநூல்காரர் என்றோ அல்லது அடைப்புகுறியிலோ, பல்கார் அல்லது சௌராஷ்ட்ரா என்பதை எழுத்து பிழையுடன் என வேறு எந்த வகையில் குறிப்பிட்டாலும், அது தனி பிரிவாக எடுத்துக் கொள்ளப்படும் அபாயம் உண்டு தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் எண் 115-ல் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என மட்டுமே குறிப்பிட்டால் போதும். தமிழகம் தவிர பிற மாநிலங்களில் அங்குள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்கு ஏற்பவோ அல்லது அப்படி ஏதும் இல்லையெனில் சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என்றே குறிப்பிடவேண்டும்.

2. தாய்மொழி பற்றிய கேள்வி

14	Mother Tongue & Other Languages Known	Primary language spoken at home and secondary linguistic capabilities.

மொத்தம் 40 கேள்விகளில் 2027 பிப்ரவரியில் 14 வது கேள்வியாக வீட்டில் பேசும் முதன்மை மொழி என்பதாக தாய்மொழிக்கான கேள்வி அறிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் பேசும் முதன்மை மொழி என தெளிவாக உள்ளதால், சௌராஷ்ட்ரர் அனைவரும் சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என ஒரே மாதிரியாக குறிப்பிட வேண்டும். 2011 சென்சஸ்ல் மிக குறைவாக 2.47 லட்சம் என உள்ள நம் மக்கள் தொகை, இதன்மூலம் பலமடங்காக, இன்றைய உண்மையான மக்கள் தொகையை வெளிக்கொணரும்.

தமிழகம் உட்பட இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் வசிக்கும் சௌராஷ்ட்ரர் அனைவரும் சௌராஷ்ட்ரா (SOURASHTRA) என ஒரே மாதிரியாக குறிப்பிடவேண்டும்.

இந்த இரண்டு சரியான பதில்களும் நமது, சமூக, பொருளாதார, அரசியல்,கல்வி, வேலைவாய்ப்புகளை நியாயமான முறையில் பெற பேருதவியாக இருக்கும்

இதுபற்றிய விழிப்புணர்வை வீட்டுக்கு வீடு, டிசம்பர் 2026 க்குள் எடுத்துச் செல்வது அவசியம்.

- S.R. Nageswaran
Co-ordinator, Sourashtra Linguistic &
Ex-MD., ITCOT, Chennai.



வெந்தயத்தின் பயன்கள்!

நாம் அன்றாட உணவில் பயன்படுத்தும் பொருட்களில் வெந்தயம் முக்கிய பங்கு வகுக்கிறது. இது உடலில் உள்ள ரத்த ஓட்டத்தை சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றது.

நாம் அன்றாட உணவில் பயன்படுத்தும் பொருட்களில் வெந்தயம் முக்கிய பங்கு வகுக்கிறது. இது உடலில் உள்ள ரத்த ஓட்டத்தை சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றது. நம் உடலுக்கு தேவையான அனைத்து விதமான பயன்களும் வெந்தயத்தில் உள்ளது. வெந்தய விதைகளில் புரதம், சர்க்கரை, வைட்டமின், உலோகச்சத்து, அமினோ அமிலங்கள் ஆகியவை அடங்கியிருக்கின்றன.

வெந்தய இலைகளிலும், தண்டுகளிலும் கால்சியம், இரும்புச்சத்து நிறைந்துள்ளது. உடலுக்கு குளிர்ச்சி அளிப்பதுடன் உடலை சமநிலையில் வைக்கவும் வெந்தயம் பயன்படுகிறது. இரவில் வெந்தயத்தை ஊற வைத்து காலையில் எழுந்து அந்த தண்ணீரை பருகி வந்தால் உடல் குளிர்ச்சியாகவும், மலக்சிக்கலை போக்கவும் நல்ல மருந்தாகவும் பயன்படுகிறது. கோடைக்காலத்தில் மோரில் வெந்தயத்தை ஊற வைத்து குடித்து வர நீரிழிவு, வயிற்றுப்புண், வாய் துர்நாற்றம் உட்பட பல நோய்கள் குணமாகும்.

வெந்தயத்தை அரைத்துத் தீப்பட்ட இடங்களில் தடவ எரிச்சல் குறைவதோடு சீக்கிரம் புண்ணை ஆற்றும் தன்மைக் கொண்டது.

வயிற்றுப்போக்கை குணமடையச் செய்வதோடு, தாய்ப்பால் பெருக்கும் தன்மையும் இதற்கு உண்டு. சர்க்கரை வியாதி குறைக்கும் மருத்துவ குணமும் இதில் உள்ளது. வெந்தய கீரையைப் பகலில் சமைத்து சாப்பிட்டு வர வாய்வு தொல்லையிலிருந்து விடுபடலாம். வயிற்று உப்புசம் இருந்தாலும் குறையும். வெந்தயக்கீரையைக் கூட்டு வைத்துப் பகலில் சாப்பிட்டால் வாய்வு கலைந்து விடும். மூன்றே நாட்களில் வாயு முழுவதையும் கலைத்து விடும். வயிற்று உப்புசம் இருந்தாலும் தணிந்து விடும். வெந்தயக் கீரையைப் பொடியாக நறுக்கி வதக்கி, இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு, சுண்டக்காய்ச்சி, இருவேளையும் அரை டம்ளர் வீதம் குடித்து வந்தால் நெஞ்சுவலி பூரணமாகக் குணமாகும்.

பெண்களுக்கு முடி கொட்டும் பிரச்னையில் இருந்து விடுபட வெந்தயம் உதவுகிறது. இரவு உறங்க செல்லும் முன் வெந்தயத்தை ஊற வைத்துவிட்டு காலையில் அதை விழுதாக அரைத்து அரை மணி நேரம் தலையில் தடவி குளித்து பாருங்கள், முடி உதிர்வது குறைவதோடு, அடர்த்தியாக வளரவும் செய்கிறது. பொடுகுப் பிரச்னை, அரிப்பு, குறைவதோடு முடி பளபளப்பாகவும் வைக்கிறது. வெந்தய விழுதை பருக்கள் மீது தடவ பருக்கள் மறையும்.

தொழில் நிறுவனங்களுக்கு சலுகை
மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவு

தொழில் நிறுவனங்கள் ஆலைகளை தொடர்ந்து இயக்க, சுற்றுச்சூழல் அனுமதியை தொகுப்பு முறையில், 14 ஆண்டுகள் வரை ஒரே முறையில் புதுப்பிக்கலாம் என மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

தொழிற்சாலைகள் தொடங்க வேண்டும் என்றால், அதற்கு முறையாக விண்ணப்பித்து சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதி அடிப்படையில் ஆலைகளை இயக்குவதற்கான அனுமதியை மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்குகிறது.

தற்போது நிலவரப்படி, ஓரிரு ஆண்டுகளுக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப்படுகிறது. அனுமதி காலம் முடியும் நிலையில் தொழில் நிறுவனங்கள் மீண்டும் கட்டணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டும்.

இதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை காரணமாக தொகுப்பு முறையில் அதிக ஆண்டுகளுக்கு செல்லும் வகையில் அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இது தொடர்பாக தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட அறிவிப்பு:

தொழில் நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அனுமதி அடிப்படையிலான ஆலை இயக்க அனுமதியை, 5, 10, 14 ஆண்டுகள் அடிப்படையில் ஒரே தவணையில் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம்.

சிவப்பு, ஆரஞ்சு, பச்சை வகை பட்டியலில் இடம்பெற்றுள்ள தொழில்களுக்கு மட்டுமே இது பொருந்தும். இதனால், புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்து காத்திருப்பது தவிர்க்கப்படும்.

ஒரே நேரத்தில் அதிக ஆண்டுகளுக்கு அனுமதி கிடைப்பதால், விதிமீறல்கள் தவிர்க்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளில்
மார்ச் 2027-க்குள் தடையற்ற சுங்கக் கட்டண முறை

இந்தியா முழுவதும் உள்ள சுங்கச் சாவடிகளில் தற்போது நடைமுறையிலுள்ள பாஸ்டாக் முறையின்படி வாகனங்கள் வரிசையில் நின்று, தடுப்புகள் திறந்த பிறகே செல்ல வேண்டியுள்ளது. இதனால் தேவையற்ற போக்குவரத்து நெரிசலும், எரிபொருள் மற்றும் நேர விரயமும் ஏற்படுகின்றன.

இந்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, வாகனங்கள் எங்கும் நிற்காமல் தங்களின் வழக்கமான வேகத்திலேயே கடந்து செல்லும் வகையில் தடையற்ற சுங்கக் கட்டண முறையை நடைமுறைக்கு கொண்டு வர மத்திய அரசு தீவிரமாக பணியாற்றி வருகிறது.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற குளோபல் ஃபின்டெக் விழாவில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின்கட்கரி பேசியதாவது: ஓராண்டு, பலவழி தடையற்ற போக்குவரத்து மாதிரியின் கீழ் நமது அனைத்து சுங்கச்சாவடிகளிலும் தடையற்ற சுங்கக் கட்டண முறையை செயல்படுத்த விரும்புகிறோம். டிசம்பர் 2026-க்குள் இதை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

அதன்படி இந்த ஆண்டு இறுதிக்குள் 60 முதல் 70 சதவீதப் பணிகள் நிறைவடையும் என்று நான் நம்புகிறேன். 2027 மார்ச் மாதத்திற்குள், நாடு முழுவதும் தடையற்ற சுங்கச்சாவடி அமைப்பு செயல்படுத்தப்படும். சுங்கச்சாவடிகளில் காத்திருக்கும் நேரம் குறைவதால் ஆண்டுக்கு சுமார் 71 கோடி மணி நேரமும், 56 கோடி லிட்டர் எரிபொருளும் சேமிக்கப்படும்.

எரிபொருளின் மதிப்பு ஏறத்தாழ ரூ.5,250 கோடியாகவும், பயணிகள் மிச்சப்படுத்தும் நேரத்தின் பொருளாதார மதிப்பு ரூ. 68,500 கோடியாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தால் சுங்கச்சாவடி இயக்க செலவு 2% முதல் 4% ஆக குறையும். இது ஆண்டுக்கு ரூ.6,000 கோடி முதல் ரூ.7,000 கோடி வரை சேமிக்க உதவும். இவ்வாறு அவர் பேசினார்.

50 வயதில் ரூ.1 கோடி சேர்க்க சிறந்த வழி

நீங்கள் எந்த வயதில் தொடங்கினாலும், 50 வயதில் ரூ.1 கோடியை அடைய மாதம் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்பதை அறிவது அவசியம். 30, 35 மற்றும் 40 வயதில் முதலீட்டைத் தொடங்கினால் எவ்வளவு தொகை தேவைப்படும் என்பதை விரிவாகப் பார்ப்போம்.

வாழ்க்கையில் 50 வயதிற்குள் ரூ.1 கோடி ஓய்வூதிய நிதியை (Corpus) சேர்ப்பது பலரின் முக்கிய இலக்காக உள்ளது. ஆனால், அனைவரும் ஒரே வயதில் முதலீட்டைத் தொடங்குவதில்லை. சிலர் இளமையிலேயே விரைவாகத் தொடங்குகிறார்கள்; மற்றவர்கள் தாமதித்து, கூட்டு வட்டியின் (Compounding) கூட்டு பலன்களை இழக்கிறார்கள்.

நீங்கள் எந்த வயதில் தொடங்கினாலும், 50 வயதில் ரூ.1 கோடியை அடைய மாதம் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்பதை அறிவது அவசியம். 30, 35 மற்றும் 40 வயதில் முதலீட்டைத் தொடங்கினால் எவ்வளவு தொகை தேவைப்படும் என்பதை விரிவாகப் பார்ப்போம்.

எஸ்.ஐ.பி. மூலம் ரூ.1 கோடி நிதியை உருவாக்குவது எப்படி?

ஒரே நேரத்தில் மொத்தமாக பெரிய தொகையை முதலீடு செய்வதை விட, மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்கு மியூச்சுவல் ஃபண்டுகளில் சிஸ்டமேட்டிக் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் (SIP) சிறந்த தேர்வாகும். இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை முதலீடு செய்யலாம்.

நீண்ட கால முதலீட்டிற்கு ஈக்விட்டி ஃபண்டுகள் (சிஸுற்ஷ்மிதீ யிற்ஜ வி) சிறந்த தேர்வாகக் கருதப்படுகின்றன, ஏனெனில் இவை பணவீக்கத்தை மிஞ்சிய வளர்ச்சியைத் தருகின்றன. வரலாற்றுத் தரவுகளின்படி, லார்ஜ்-கேப் ஃபண்டுகள் சராசரியாக 11.76%, மிட்-கேப் ஃபண்டுகள் 15.50% மற்றும் ஸ்மால்-கேப் ஃபண்டுகள் 16.76% வருடாந்திர வருமானத்தை வழங்கியுள்ளன. நமது கணக்கீட்டிற்கு, சராசரியாக 12% வருடாந்திர வருமானம் (Annualised Return) கிடைக்கும் எனக் கருதுவோம்.

சாதாரண SIP முறை (Normal SIP):

30 வயதில் தொடங்கினால்: 50 வயதை அடைய 20 ஆண்டுகள் அவகாசம் உள்ளது. 12% எதிர்பார்ப்பு வருமானத்தில், மாதம் ரூ.10,875 முதலீடு செய்தால் ரூ.1 கோடியை அடையலாம்.

35 வயதில் தொடங்கினால் முதலீடு செய்ய 15 ஆண்டுகள் மட்டுமே இருக்கும். இதனால் மாத SIP தொகை ரூ.21,020 ஆக உயரும். அதாவது 30 வயதில் தொடங்குவதை விட 93% கூடுதல் முதலீடு தேவை.

40 வயதில் தொடங்கினால் முதலீட்டு காலம் 10 ஆண்டுகளாகக் குறைகிறது. இதனால் மாதம் ரூ.46,640 முதலீடு செய்ய வேண்டும். காலம் பாதியாகக் குறையும் போது, முதலீட்டுத் தொகை 329% வரை அதிகரிக்கிறது. இதுவே கூட்டு வட்டியின் ஆற்றல் ஆகும்.

ஸ்டெப்-அப் SIP முறை (Step-Up SIP):

மாதம் ரூ.10,875 அல்லது ரூ.21,020 போன்ற தொகையை உடனடியாக ஒதுக்க முடியாதவர்களுக்கு ஸ்டெப்-அப் எஸ்ஐபி ஒரு வழியாக இருக்கலாம். இதில் குறைந்த தொகையில் முதலீட்டைத் தொடங்கி, ஒவ்வொரு ஆண்டும் வருமானம் அதிகரிக்கும்போது எஸ்ஐபி தொகையையும் குறிப்பிட்ட சதவீதத்தில் உயர்த்தலாம்.

இந்தக் கணக்கீட்டில் ஆண்டுக்கு 5 சதவீதம் எஸ்ஐபி தொகையை அதிகரிப்பதாகவும், ஆண்டுக்கு 12 சதவீத வருமானம் கிடைப்பதாகவும் கருதப்பட்டுள்ளது.

30 வயதில் ஸ்டெப்-அப் எஸ்ஐபியைத் தொடங்கினால், மாதம் சுமார் ரூ.7,850 முதலீடு செய்து, ஒவ்வொரு ஆண்டும் முதலீட்டை 5 சதவீதம் உயர்த்துவதன் மூலம் 50 வயதில் ரூ.1 கோடி இலக்கை அடையலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

35 வயதில் தொடங்குபவர்கள் ஆரம்பத்தில் மாதம் சுமார் ரூ.16,160 முதலீடு செய்யலாம். பின்னர் ஒவ்வொரு ஆண்டும் எஸ்ஐபி தொகையை 5 சதவீதம் உயர்த்தினால், 50 வயதில் ரூ.1 கோடி இலக்கை அடைய முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

40 வயதில் முதலீட்டைத் தொடங்குபவர்களுக்கு கால அவகாசம் குறைவாக இருப்பதால் ஆரம்ப முதலீடும் அதிகமாக இருக்கும். அவர்கள் மாதம் சுமார் ரூ.37,130 முதலீட்டில் தொடங்கி, ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் தொகையை அதிகரித்தால் 10 ஆண்டுகளில் ரூ.1 கோடி இலக்கை அடைய முடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இக்கணிப்புகள் மூலம், எவ்வளவு விரைவாக முதலீட்டைத் தொடங்குகிறீர்களோ, அவ்வளவு குறைவாகவே மாதம் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்பதை உணரலாம். அதேபோல், ஸ்டெப்-அப் முறையைப் பயன்படுத்துவது ஆரம்பகால நிதிச் சுமையைக் கணிசமாகக் குறைக்கும்.



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIJAYASHANKAR SCREEN SUPPLIERS

Non Woven Fabrics & Bags

Surgical Spunbond & Lace

SMMS

100% Viscos

Hydrophilic

JUTE FABRICS & BAGS

COTTON FABRICS & BAGS

Sanitary Napkin Raw Materials

Screen Printing Materials /

Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper



Surgical Gown, Mask & More



N95 Masks

PPE Kit Surgical

J.A. SANKAR


94431 34465

For Order & Info

93441 04451, 91500 32885 / 86

H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com

B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

விஜயலெட்சுமி DTP& ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1992 31 Years 2023 SVLS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர்

12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்

தமிழ் டைரி ஆங்கில டைரி

30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை

பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY

விநாதி கவர் 7 DAYS DELIVERY

சாமி படம் வீட்லேமினேசன்

ஸ்கூல் லேபிள்





நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873,98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.09.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

Kuttuva Silicates (P) Ltd.,

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

வேல் மருத்துவமனை

வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

VALE HOSPITAL



24hrs Service

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஐவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

Right Treatment is Everyone's Right

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
நம்பர் 1
சோலார் நிறுவனம்

Prakash Green Energy

Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு 78000 ரூ அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

Premium Quality
30-Years Warranty
100% Guarantee

அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்



வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்

+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011